# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்
பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை
ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும்
ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | திண்டுக்கல் | காலம் : | 25/04/2018 | முதல் | 29/04/2018 |
| அறிக்கை எண் : | 032 / 2018 | வெளியீட்டு நாள் : | | 24/04/2018 | |

| கடந்த கால வானிலை 20/04/2018 முதல் 23/04/2018 வரை | |
|---|---|
| காரணிகள் | கடந்த கால வானிலை |
| மழை (மி.மீ) | 0.5 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 37-39 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 26-27 |
| மேக மூட்டம் | 3-5 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 37-70 |
| காற்றின் வேகம்(கி.மீ. / மணி) | 10-15 |

எதிர்பார்க்கப்படும் வானிலை ( 29-04-2018 8.30 மணி வரை )

| காரணிகள் | 25-04-2018 | 26-04-2018 | 27-04-2018 | 28-04-2018 | 29-04-2018 |
|---|---|---|---|---|---|
| | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
| மழை (மி.மீ) | 0 | 3 | 4 | 0 | 0 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 40 | 40 | 39 | 39 | 39 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 27 | 27 | 28 | 28 | 28 |
| மேக மூட்டம் | 5 | 5 | 4 | 4 | 4 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 70 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 45 | 45 | 50 | 50 | 50 |
| காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 15 | 15 | 14 | 14 | 14 |
| காற்றின் திசை | தென்கிழக்கு | தென்கிழக்கு | தென்கிழக்கு | தென்கிழக்கு | தென்கிழக்கு |

**குறுஞ்செய்தி :**
வரும் 26, 27ம் தேதிகளில் ஒரு சில இடங்களில் லேசான மழை பெய்வதற்கான வாய்ப்புள்ளது. வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 14 முதல் 15 கி.மீ வேகத்தில் தென்கிழக்கு திசையில் காற்று வீசக்கூடும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள்: எலுமிச்சை மற்றும் (கால்நடை)**

தற்போது நிலவும் பருவசூழ்நிலையில் எலுமிச்சையில் பழம் உறிஞ்சும் பூச்சியின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இதனைக் கட்டுப்படுத்த மரங்களிடையே காணப்படும் களைச்செடிகளை அப்புறப்படுத்தி சுத்தமாக வைத்திருக்க வேண்டும். ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஒரு மில்லி மாலத்தியான் என்ற விகிதத்தில் கலந்து அதனுடன் கரும்பு ஆலைக்கழிவையும் சேர்த்து தோட்டத்தில் பல இடங்களில் வைத்து அந்துப் பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம். விளக்குப் பொறிகளை வைத்தும் அந்துப்பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம்.

வெயில் காலங்களில், வறண்ட குளம் மற்றும் குட்டைகளில் தேங்கியுள்ள அசுத்தமான தண்ணீரில் உள்ள நத்தைகள், கிருமிகள் மற்றும் புழுக்கள் மூலம் கால்நடைகளை நோய் தாக்கக்கூடும். எனவே விவசாயிகள் தங்கள் கால்நடைகள் தண்ணீர் வற்றியுள்ள குளம் குட்டைளில் தண்ணீர் குடிக்க வைப்பதை தவிர்க்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.